முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையா அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு மதுரை, திருமங்கலம் அருகில் உள்ள முத்தப்பன்பட்டியில் அமைந்திருக்கும் அன்னாரின் நினைவிடத்தில் சிவகங்கை மாவட்டச் செயலாளர் – கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். உடன் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், முன்னாள் அமைச்சர் தென்னவன், சிவகங்கை மாவட்ட துணை செயலாளர் சேங்கை மாறன், திருமதி பாரதி மணிமாறன் மற்றும் கழகத்தினர், குடும்பத்தினர், பொதுமக்கள் உள்ளனர்

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி காமராஜர் நகரில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு படிக்கும் மாணவிகளுக்கு தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை சார்பில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா மு.நாசர் எம்.எல்.ஏ, 550 பள்ளி மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன் பொன்னேரி கல்வி மாவட்ட அலுவலர் கஸ்தூரி மண்டல தலைவர் ஜோதிலட்சுமி, மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ் பள்ளி தலைமை ஆசிரியர் பிரேமா, பகுதி கழகச் செயலாளர்கள் நாராயண பிரசாந்த், பொன் விஜயன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தில்

பல்வேறு துறைகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது!

நீலகிரி, செப். 23-

நீலகிரி மாவட்டம், உதகை, தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், மகளிர் திட்டம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, மீன்வளத்துறை, பட்டு வளர்ச்சித்துறை, தாட்கோ மற்றும் கால் நடை பராமரிப்புத்துறை

ஆகிய துறைகளின் சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மற்றும் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து துறைச்சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் 21.09.2024 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்கள் அறிவித்த திட்டங்களின் தற்போதை நிலை மற்றும் முன்னேற்றம் குறித்தும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் மக்களை தேடி மருத்துவத்திட்டம், வருமுன் காப்போம் திட்டம், கண்ணொளி காப்போம் திட்டம், ராஷ்டிரிய பால் ஸ்வஸ்திய காரியக்ரம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம், நடமாடும் மருத்துவ சேவை, இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டம், முதலமைச்சரின் புதிய மருத்துவ காப்பீடு திட்டம் குறித்தும், மகளிர் திட்டம் சார்பில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான வங்கிகடன் இணைப்பு, பண்ணை சார்ந்த வாழ்வாதார திட்டங்கள், தீனதயாள் உபாத்தியா கிராமின் யோனா, இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு, முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் சுய உதவிக்குழுக்களுக்கான திட்டங்கள் குறித்தும்,

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில், நலிந்த நிலையில் உள்ள தலைசிறந்த முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட்ட விவரங்கள், முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் குறித்தும், மீன்வளத்துறை சார்பில், மாவட்டத்திலுள்ள உயர்மட்ட குளிர்ந்த நீர்நிலைகளில் பரவும் மீன் குஞ்சுகள் இருப்பு செய்தல் குறித்தும், பட்டு வளர்ச்சித்துறை சார்பில், குன்னூர் அரசு விதைப் பண்ணை யில் ஒருங்கிணைந்த பட்டு வளர்ச்சி மற்றும் சுற்றுலா மையம் தொடர்பாகவும், தாட்கோ மூலம் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டுத்திட்டம், தொழில் முனைவோர் திட்டம், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் புறக்கடை கோழி வளர்ப்புத்திட்டம், புல்வளர்ப்புத்திட்டம், மின்சாரம் மூலம் இயங்கும் புல் நறுக்கும் இயந்திரம் உள்ளிட்ட திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

பின்னர் இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி ஒவ்வொரு துறையின் வாயிலாக பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங்களை அறிவித்து, அதனை மிகச் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் அரசு திட்டங்களின் பயன்கள் பொதுமக்களுக்கு சென்று சேர்க்கிறதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ள தெரிவித்ததன் அடிப்படையில், நமது மாவட்டத்தில் நேற்றைய தினம் ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் பேரூராட்சிகள் ஆகிய துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் அரசின் முக்கிய அறிவிப்புகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, மகளிர் திட்டம், தாட்கோ உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு துறையின் சார்பாக நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், மாவட்ட அளவில் தீர்க்க முடியாத கோரிக்கைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக என்னிடம் வழங்கும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட துறைச் சார்ந்த அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அதற்கான தீர்வு காண உரிய நடவடிக்கை மேற்கொள்ளபடும் எனவும், அரசின் திட்டங்கள் மக்களுக்கு உரிய நேரத்தில் சென்றடையும் வகையில் துறைச் சார்ந்த அலுவலர்கள் தங்களது பணிகளை மிகச் சிறப்பான முறையில் மேற்கொள்ள வேண்டும் எனவும், மக்களுக்கு சேவை ஆற்றுகின்றோம் என்று மனதில் நினைத்து தங்களது பணிகளை முழு ஈடுபாட்டுடன் மேற்கொள்ள வேண்டும் எனவும், அடுத்த ஆய்வுக் கூட்டத்திற்கு வருகை தரும்போது தற்போழுது வரை தொடங்கப்படாத பணிகளையும் தொடங்கி, நடைபெற்று வரும் பணிகளையும் விரைவில் முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. கீதாஞ்சலி, மகளிர் திட்ட இயக்குநர் காசிநாதன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திருமதி.கல்பனா, இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) (பொ) மரு.நாகபுஷ்பராணி, துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.பாலுசாமி, மீன்வளத்துறை உதவி இயக்குநர் திருமதி. ஜோதிலட்சுமி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் (பொ) திருமதி.இந்திரா, தாட்கோ பொது மேலாளர் சக்திவேல், பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் (பொ) திருமதி. திலகவதி, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல துணை இயக்குநர் திருமூலம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 75ஆம் ஆண்டு பவளவிழா மற்றும் முப்பெரும் விழாவை கொண்டாடும் வகையில் எழும்பூர் தெற்கு பகுதி திமுக சார்பில் பகுதி கழக செயலாளர் வி.சுதாகர் தலைமையில் 61வது வட்டம் மற்றும் 61 'அ' ஆகிய வட்டங்களில் சுமார் 10 மேற்பட்ட இடங்களில் கழக மூத்த முன்னோடிகளான மாவட்ட அவை தலைவர் கோ.ஏகப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மணிமுடி ஆகியோர் கலந்து கொண்டு கழகத்தின் இருவண்ணாக் கொடியினை ஏற்றி வைத்து கழக உடன்பிறப்புக்கும் பொதுமக்களுக்கும் இனிப்புகளை வழங்கினார்கள். மேலும் இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.நாதன், பொதுக்குழு உறுப்பினர் அ.நிர்மலாதேவி, மாமன்ற உறுப்பினர் எல்.சுந்தர்ராஜன், பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.ரசூல், டி.வி.வேலு, எம்.மலர்மாறன், கே. அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், வட்ட கழக செயலாளர்கள் எஸ்.டால்பின் ஹரி, இ.மொய்தீன் உள்ளிட்ட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்துஅணி பொறுப்பாளர்கள், பாக முகவர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் என பலர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில்

பொறியாளர் அணி பொறுப்புகளுக்கு விண்ணப்பங்கள்!

மாவட்டச் செயலாளர்– அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, செப். 23-

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக ஒருங்கிணைப்புக் குழு ஆய்வுக் கூட்டத்தில் மாநில இளைஞரணிச் செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், தி.மு.கழக பொறியாளர் அணியின் நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக அளவில் பொறியாளர் அணிக்கு நிர்வாகிகளை விண்ணப்பம் மூலம் தேர்வு செய்திட கழக பொறியாளர் அணிச் செயலாளர் எஸ்.கே.பி. கருணா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

அவரது அறிவிப்புக்கு இணங்க தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நகர ஒன்றிய, பகுதி, பேரூர் கழக அளவில் பொறியாளர் அணி நிர்வாகிகள் பொறுப்புக்கு விருப்பமுள்ளவர்கள் இணையதளம் மூலம் விண்ணப்பம் செய்திட வேண்டும். அதற்கென பிரத்யோக QR CODE உருவாக்கப்பட்டுள்ளது. இந்த QR CODE ஆனது தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக அலுவலகத்திலும், அந்தந்த நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக அலுவலகங்களிலும் உள்ளது.

நகரம், ஒன்றியம், பகுதி, பேரூர் கழக அளவில் பொறியாளர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பதவிக்கு B.E. அல்லது டிப்ளமோ படித்திருக்க வேண்டும்.

கல்லூரியில் பொறியியல் அல்லது பட்டயப டிப்பு (டிப்ளமோ) படித்துக் கொண்டிருக்கும் ஆண்கள், பெண்கள் இருவரும் விண்ணப்பம் செய்யலாம்.

நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழக அளவில் பொறியாளர் அணி அமைப்பாளர் ஒருவரும், துணை அமைப்பாளர்களாக பேரும் தேர்வு செய்யப்படுவார்கள்.

மேற்கண்ட விதிமுறைகளின்படி நடைபெறும் பொறியாளர் அணி நிர்வாகிகளுக்கான பொறுப்புகளுக்கு சம்பந்தப்பட்ட நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகங்களுக்கு உட்பட்ட பொறியாளரணி தோழர்கள் விண்ணப்பம் செய்திடவும், அதற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் செய்திடவும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பூவிருந்தவல்லி நகராட்சி குமணன்சாவடி 17 ஆவது வார்டில் பூவிருந்தவல்லி சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கட்டிடம் அமைக்கும் பணியை சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். உடன் நகரக் கழக செயலாளர் ஜி.ஆர்.திருமலை, நகர்மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், நகராட்சி ஆணையர் லதா, நகர மன்ற துணைத் தலைவர் ஸ்ரீதர், நகர கழக நிர்வாகிகள் எச்.தாஜுதீன், துரைபாஸ்கர், அப்பர்ஸ்டாலின், டில்லிராணி மலர்மன்னர், எஸ்.அசோக்குமார், ஜெ.சுதாகர், இரா. புண்ணியங்கோட்டி, அன்பழகன், சௌந்தரராஜன், வட்ட கழக செயலாளர் எம். உமாசங்கர் உள்பட பலர் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கோ. வாசுதேவன்

செப்டம்பர் 23 (2023)

இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

செவ்வாய்ப்பேட்டை கிளை செயலாளராகவும், அவைத்தலைவராக பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறவழிப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கோபி ஜி. வெங்கிடு

செப்டம்பர் 23 (2020)



பள்ளிப் பருவத்திலேயே திராவிடர் கழக கொள்கையில் ஈர்க்கப்பட்டு பணியாற்றி வந்த இவர், கழகம் துவங்கிய காலத்திலேயே உறுப்பினர். தீவிர சுயமரியாதைக்காரர்.

வட்டச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட இலக்கிய அணி தலைவர் – மாநில விவசாய அணி இணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்ததோடு, தலைமைக் கழக பேச்சாளராக தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளை பரப்பியவர்.

கோபி நகர் மன்ற உறுப்பினராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியதோடு, 1996ஆம் ஆண்டு கோபி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

1952–ல் தார்ச்சட்டி ஏந்தி இந்தியை அழித்த போராட்டத்தில் துவங்கி, 1964 இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தில் ஒரு மாதம் சிறைவாசம் அனுபவித்தவர்.

"பொதுமக்களின் சேவகராகத் திகழ்ந்த – கழகத்தின் முன்னணிச் செயல்வீரர்களில் ஒருவரான ஜி.பி.வெங்கிடு அவர்களின் மறைவு கழகத்திற்குப் பேரிழப்பாகும். " என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.